1970 நவம்பர் 27]

பாம்பாற்றின் குறுக்கே பாலங்கள்

* 28 விஞ.—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு உணவு, உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதியிலுள்ள இரும்பாநுடு செல்லும் சாலேயில் பெரும் பாலமொன்று அமைப்பது குறித்து அரசு பரிசீலித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இரும்பாநுடு செல்லும் சாலேயில் பாம்பாற்றிற்குக் குறுக்கே ஒரு பாலம் கட்டும் பணி நான்காம் ஐந்தாண்டு வரைவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

* 29 விஞ.—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் தொகுதியில் உள்ள ராயவரம்–கொத்தமங்கலம் சாலேயின் இடையிலுள்ள பாம் பாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனேயிலுள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லே.

(இ) இக்கேள்வி எழவில்லே.

Magistrate's Court in Tuticorin

* 30 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal pending before the Government of Tamil Nadu to shift the Magistrate's Court in Tuticorin to the compound of the District Munsif's Court; and

(*b*) if so, when it will be done?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) இல்லே.

வலம் வரும் வழக்கு மன்றங்கள்.

* 31 விஞ.—திரு. கே. சகாதேவ கண்டர் / திரு. வை. சுவாமிநாதன் } மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

நடமாடும் கோர்ட்டு வண்டி சென்னேயில் இருப்பதைப் போல் மற்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிக்க ஏதேனும் செயற்குறிப்பு அரசு பரிசீலனேயிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தற்போது மதுரை மாவட்டத் தில் போக்குவரத்துக் குற்றங்களே மட்டும் விசாரணே செய்ய ஒரு வலம் வரும் வழக்கு மன்றம் (Mobile Court) செயல்பட்டு